**செ. கு. எண்**:233 **நாள்**:5-12-2011.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 5.12.2011

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், நாகம்பந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு. மருதமுத்து என்பவரது மகன் முருகன் **27.11.2011** அன்று குளத்தில் குளித்துக் கொண்டிருக்கும் போது நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்,

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, JSS கல்லூரி மாணவர் திரு. சுதர்சன் ரெட்டி என்பவர் **28.11.2011** அன்று கேத்தரின் அருவியில் குளித்துக் கொண்டிருக்கும் போது, அருவி நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்,

சென்னை, சைதாப்பேட்டை, ஜோதியம்மாள் நகரில் வசித்து வரும் திரு. வெங்கடேசன் என்பவரது மகன் சிறுவன் சந்தோஷ் அடையாறு ஆற்றின் கரையில் **3.12.2011** அன்று விளையாடிடக் கொண்டிருந்த போது, ஆற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்,

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், திருவொற்றியூரைச் சேர்ந்த திரு. வினோத் குமார் என்பவரின் மகன் திரு. நந்தகுமார் என்ற கல்லூரி மாணவர் **3.12.2011** அன்று கடலில் குளிக்கும் போது நீரில் மூழ்கி காலமானார் என்ற செய்தியையும்,

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், புதுச்சத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கபாலி என்பவரின் மகன் குமார் **4.12.2011** அன்று கூவம் ஆற்றில் குளிக்கும் போது நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

பல்வேறு விபத்துகளில் காலமான இந்த ஐந்து பேரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**